Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 27 (10 - 06 - 1991) திங்கட்கிழமை ஓசை: 112

## அனுமதி அட்டை வழங்க நிலையங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

அவசர தேவைகளுக்காக வடபகுதியிலிருந்து வெளியேறுவோர் அதற்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய இடங்களின் விபரங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்வருவோர், வெளியேறுவோருக்கான கண்காணிப்பு புலனாய்வுப்பிரிவு வெளியிட்டுள்ளது. இதன்படி, யாழ் மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை-கல்லாற்றில்

# புலிகளின் அதிரடிக்கு

# ஆறு இராணுவம் பலி

## ஆயுதங்களும் மீட்பு

(திருமலை)

திருமலையில் நேற்றுக் காலை புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஆறு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் காயங்களுடன் ஓடிவிட்டனர். கொல்லப்பட்டவர்களின் ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவலில்லை.

திருமலை மாவட்டத்தில் உள்ள கல்லாற்றுப்பகுதியில் நேற்றுக்காலை 10.25 மணி அளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. அண்மையில் இருந்த இராணுவ முகாமிலிருந்து ரோந்து வந்தவர்களே புலிகளின் அதிரடித்தாக்குதலுக்கு இலக்கானவர்களாகும். புலிகளின் கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாத இராணுவத்தினர் காயங்களுடன் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

### ஆயுதங்கள் மீட்பு

இம்மோதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-56-2 ரக துப்பாக்கி - 4
- ★ ரவைக்கூடுகள் - 12
- ★ ரி - 81 ரக துப்பாக்கிகள் - 2
- ★ ரவைக் கூடுகள் - 6
- ★ ரி 81ரக ஏறிகணைகள் - 4
- ★ ஜே ஆர். கைக்குண்டுகள் - 5
- ★ நடுத்தர ரவைகள் - 360

## பத்திரிகையாளர் வடக்கே வரத்தடை

வவுனியா சிறிலங்கா இராணுவத்தின் சோதனை முகாமைத் தாண்டி கொழும்பு பத்திரிகையாளர்கள் வடபகுதி வருவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

அண்மைக் காலமாக இத்தடை விதிக்கப்பட்டுள்ளது; மீறிச் செல்லும் கொழும்புப் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்படலாம் என்றும் அறியப்படுகிறது.

சமீபத்தில் வவுனியாவில் இராணுவ அதிகாரி ஒருவரிடம் அனுமதி பெற்று வந்த பத்திரிகையாளர் ஒருவர் தாண்டிக்குளம் சோதனை முகாமில் உள்ள இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## ச. தே. மன்னிப்பு சபைக்கு கொழும்பில் மிரட்டல்

(கொழும்பு)

கொழும்பு வந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபைக் குழுவிற்கு பல கொலை மிரட்டல் கடிதங்கள் வந்திருப்பதாகத் தெரியவருகின்றதென நேற்று இரவு பி. பி. ஸி. அறிவித்தது. அத்தவேளை, மட்டக்களப்பிற்குச் செல்லவிருந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பயணம் ரத்துச் செய்யப்பட்டதாகவும், அதற்கான காரணம் தெரியவரவில்லை எனவும் மேலும் அறிவித்தது.

### ஐ. நா. சபை

## மனித உரிமைகள் குழுவில் சிறிலங்கா அங்கத்துவம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிறிலங்காவுக்கு உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது. 1992 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து செயற்படும் படியான இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான மோதலில் நான்கு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் நான்கிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

வந்தாறுமூலைப் பகுதியில் நேற்று முன் தினம் காலை ரோந்துசென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே இம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு

(ஆனையிறவு)

சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நேற்று ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்த விமானங்கள் நேற்றுக் காலை 9-50 தொடக்கம் 11 மணிவரை நடாத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஆறுதடவைகள் குண்டுகள் வீசப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் ஏழு தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் மேற்படி கிராமத்தில் உள்ள அம்பலத்தடிப் பகுதியை நேற்று முன்தினம் காலை 10-30 மணியளவில் சுற்றி வளைத்தார்கள். இச்சுற்றி வளைப்பில் ஏழு தமிழ் மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "பேச்சுவார்த்தை மூலம் முடிவு காணமுடியாது"

(கொழும்பு)

எதிர்வரும் இருபத்திநான்காம் திகதிக்கு முன்னர் அரசியல் தீர்வுக்கான யோசனை ஒன்றைக் காணமுடியாதபட்சத்தில் பேச்சுவார்த்தைமூலம் இணக்கம் காணமுடியவில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதிக்கு அறிவிப்பது என அனைத்துக்கட்சியின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக்கழக அனுமதி;

# கலைப்பிரிவு மாணவர்கள் தெரிவு முழுமையாக திறமை அடிப்படையில்

- லலித் அத்துலத் முதலி

(கண்டி)

நூறுசத விகிதம் திறமை அடிப்படையில் கலைத்துறை சார்ந்த மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும். இது காலப்போக்கில் ஏனைய கற்கை நெறிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதுஎன்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி உடுதும்பெறவில் மாணவர் தலைவர்கள் கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்தார். ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான பிற்பகல் வகுப்புகள் ஜூலை 1ஆம் திகதியிலிருந்து கட்டாயமாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேற்படி கூட்டத்தில் தெரிவித்த திட்டங்களாவன: 1 80,000 ஆசிரியர்கள் தேவையில் 35,000 பட்டதாரி ஆசிரியர்களே தற்சமயம் நியமிக்கப்படுகிறார்கள். இனிமேல்பட்டதாரி ஆசிரியர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படமாட்டாது பாடசாலைகள் மாவட்ட அடிப்படையில் அல்லாமல், வசதிகள், வளங்கள் அடிப்படையில் தரம்பிரிக்கப்படும். கஷ்டப் பிரதேசங்களிலகற்பித்தல் தொழில் செய்யும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு மிக நல்ல பாடசாலைகளில் அனுமதி வழங்கப்படும். ஆசிரியர்கள் அல்லாதவர்கள் குறிப்பாகப் பட்டதாரிகள் ஆசிரியர் பற்றாக்குறையைச் சமாளிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென்னைமரம் வீழ்ந்து இளைஞர் பலி

(வவுனியா)

வவுனியாநொச்சிமோட்டை பகுதியில் தென்னை மரம் முறிந்து வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் பலியானார்.

கடந்த 6 ஆம் திகதி ஏற்கனவே விமானக் குண்டுவீச்சினால் சேதமடைந்திருந்த தென்னை மரம் காற்றிற்குத் திடீரென்று முறிந்து வீழ்ந்ததில் அதன் கீழ் நின்றிருந்த கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த இராசையா சிவப்பிரகாசம் என்பவரே இவ்வாறு அகால மரணத்தைத் தழுவிக் கொண்டார். (தி)

### சாவகச்சேரி மாவீரர் கலை அரங்கில்

## 4ஆம் நாள் முத்தமிழ் விழா கோலாகல ஆரம்பம்

(சாவகச்சேரி)

முத்தமிழ் விழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் நேற்று மாலை சாவகச்சேரி சிவன் கோயில் அருகாமையில் அமைந்துள்ள மாவீரர் கலையரங்கில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றத்துடன் ஆரம்பமானது.

தமிழீழத்தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் தென்மராட்சி பொறுப்பாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## "இலட்சியத்தைத் தொடர வீட்டிற்கொரு வீரர்"

- செல்வம் மாமா

(சாவகச்சேரி)

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு வெற்றிப்படிகளுக்கும் ஒவ்வொரு வீரர்கள் காரணமாயிருக்கிறார்கள். அவர்கள் சென்ற பாதையை நாம் திரும்பிப்பார்க்கவேண்டும் அவர்களின் இலட்சிய வேட்கையை நிறைவேற்றவீட்டுக்கொருவீரராவது எமதுநாட்டைக்காக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு நேற்றுமாலை சாவகச்சேரி மாவீரர் கலையரங்கில் இடம் பெற்ற நான்காம்நாள் முத்தமிழ் விழாவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

பயிற்சி வகுப்புக்கள்

சேக் ஐசிங், சமையற்கலை புதிய பயிற்சி வகுப்புக்கள் 15-6-91 சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. Yogi Home Science Academy 71B நாயன்மார் வீதி, (off Kachcheri Nallur Road) நல்லூர், யாழ்ப்பாணம்.

(B-1444)

### மேஜர் ஜெனரல் தேவநாயகம்

## மார்புப்பகுதியில் ஏற்பட்ட காயத்தினால் மரணம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் தேவநாயகத்தின் மார்புப் பகுதியில் ஏற்பட்ட காயங்களினால் இரத்தம் பெருகியதாலும், இருதயத்தை ஊடுருவிக்காயம் ஏற்பட்டதாலும் மரணம் சம்பவித்தது என்று கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி சிட்னிபிரேமரெத்ன சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரைபிள் குண்டுகளால் மார்பு துளைக்கப்பட்டு இரத்தம் பெருகி சரோஜினி தேவநாயகம் இறந்ததாகப் பிரேத பரிசோதனை அறிக்கையில் உதவிச் சட்ட வைத்திய அதிகாரி கே. பி. பி. காரியவாசம் தெரிவித்துள்ளார்.

கொலைச் சந்தேக நபர் தினேஷ் தேவநாயகம் பன்னிப்பிட்டிய இளைஞர் முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார்.

## அரச ஊழியர்கள் வாகனம் வாங்கக்கடன்

(கொழும்புத்துறை)

பொது நிர்வாக மாகாண சனபகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இல. 11/91 சுற்றறிக்கையில் அரச ஊழியர்கள் கடனாக மோட்டார் கார், முச்சக்கரவண்டி வாங்குவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அரச ஊழியர்களின் 60 மாதச் சம்பளம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்திற்கு 7 2 வீதம் வட்டி அறவிடப்படும் என மாகாண அமைச்சின் செயலாளர் திரு. ஆர். அபயரட்ணா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஏப்ரல் 26இல் வெளிவந்த இல. 11/91 சுற்றுநிருபத்தின் பிரகாரம் இக்கடனை அரச ஊழியர் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## செய்தியாளர்களுக்கு

ஈழநாதம் பத்திரிகையில் செய்தியாளர்களாக கடமையாற்றும் சகல நிருபர்களும் வரும் ஞாயிற்றுக்கிழமை 16 ஆம் திகதி காலை 10 . 00 மணிக்கு காரியாலயத்திற்கு தவறாது சமுகமளிக்கவும்.

— ஆசிரியர்

அரியாலை தெ.ப.பொ.உ. விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் (ம.ப)

## பதவி வெற்றிடங்கள்

கீழ்வரும் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், இல 15 நடுத்தெருவேன், அரியாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 21-06-91 க்கு முன்னர் அனுப்ப வேண்டும்

1. கணக்காளர் — தரம் 10

சம்பளத்திட்டம் :- 1005/- — 1705/- ; 40x5 — 50x10

தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப்பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு சம்பந்தமான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத்துறையிலான 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) /க.பொ.த (உயர்தரம்) இல் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. களஞ்சியப் பொறுப்பாளர்:- — தரம் 15

சம்பளத்திட்டம் :- 730/ — 1055 ; 20x10 — 25x5

தகைமைகள் :-

(அ) கூட்டுறவுப்பணியாளரின் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம் / க பொ. த (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக கணிதம், தூயகணிதம், தமிழ் மொழி என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:-

1. சங்கப்பணியாளர்கட்கும், சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்கட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
2. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான வயதெல்லை 25-40 வருடங்கள்

07-06-1991

ச. புஸ்பராஜா
பொதுமுகாமையாளர்

(B/2646)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்

# முத்தமிழ் விழா

## ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: சாவகச்சேரி சிவன் கோயில் அருகாமையில் அமைந்துள்ள 'மாவீரர் கலை அரங்கம்'

நாள்: 10 – 06 – 1991 திங்கட்கிழமை
நேரம்: பிற்பகல் 5. 30 மணி

★ மங்கள இசை :
நாதஸ்வரம்: திரு. கே. எம். பஞ்சாபிகேசன்
திரு. எம். பி. நாகேந்திரன்
தவில்: திரு. பி. முருகதாஸ்
திரு. ஆர். எஸ். ராமதாஸ்

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரை

★ சிறப்புரை: திரு. க. சிவராமலிங்கம் அவர்கள்

★ 'லய மாதுரி' தாளவாத்ய ப்ருந்தா

★ இசைக் கச்சேரி:
திரு. வி. கே. நடராஜா – பாட்டு
திரு. கே. கேசவமூர்த்தி – வயலின்
செல்வன் கே. கண்ணதாசன் - மிருதங்கம்
திரு. இரா. சிவராமன் - கஞ்சிரா

★ எதிர்நீச்சல் – நாட்டிய நாடகம்

★ கிளிநொச்சி கலை, பண்பாட்டு அவையினரின்
'வெற்றிக்களத்தில் வீரவேங்கை'
நாடகம்.

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 06 - 10**

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சியில் சிறிலங்காப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன் (வைத்தியகலாநிதி)

1986ஆம் ஆண்டு குருநகரிலிருந்து தூய ஒளி என்ற படகில் மீன்பிடிக்கச் சென்றபோது மண்டைதீவில் சிறிலங்கா கறுப்புச்சட்டை இராணுவத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 34 கடற்றொழிலாளர்கள்

இதே ஆண்டு வல்வைக்கடலிலிருந்து சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மரணமடைந்த பொதுமகன் (இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

1987ஆம் ஆண்டு சிறிலங்காப்படைகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**கப்டன் ரமேஷ்** (செல்வரட்ணம் கனகசபை - திரியாய்)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**ரகு** (ந: நடனசிகாமணி - உருத்திரபுரம்)

இதே ஆண்டு மந்திகையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன்

இதே ஆண்டு முகமாலையில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மாவீரர் கப்டன் ரமேஷின் பெயர் நேற்றைய நினைவு கூருகின்றோம் பகுதியில் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

(B- 2648)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

## சிந்தனைக்கு

சொல்லைக் காட்டிலும் செயல், உரக்கப்பேசும்

- பழமொழி


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10.06.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2388
த.பெ எண் 05


## தமிழீழ தேசிய விருதுகள்

தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தன்னலம் பாராது சேவையாற்றிய மண்ணின் மைந்தர்களைக் கௌரவிக்கும் முகமாக தமிழீழ தேசிய விருதுகளை வழங்குவதென தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானம் எடுத்துள்ளனர். இத் தேசிய விருதுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முத்தமிழ்விழா இறுதிநாள் நிகழ்ச்சியின் போது வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு தேசமும் தமது நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் சேவை செய்தவர்களைக் கௌரவிக்கும் முகமாக விருதுகளை வழங்குகின்றன. விழா எடுக்கின்றன. முத்திரை வெளியிடுகின்றன. இவ்வாறான பாராட்டைப் பெறுபவர்கள் அத்தேசத்தின் உன்னத பிரஜைகள் ஆகின்றனர்; அத்தோடு, அந்நாட்டின் சொத்தாகவும் மதிக்கப்படுகின்றனர். ஆனால், இவ் விருதுகளும், கௌரவங்களும் அவற்றை வழங்கும் அரசுகளின் நோக்கங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் ஏற்ப அமைகின்றன.

இத்தேசிய விருதுகள், கௌரவங்கள் பெருமளவில் மரணத்தின் பின்னும் வழங்கப்படுகின்றன. தன்னலமற்ற சேவையின்போது அம்மாமனிதர்கள் மரணிப்பதனாலேயே இவ்வாறு விருதுகள் மரணத்தின்பின் வழங்கப்பட வேண்டியநிலை வருகின்றது. சிலவேளை அவர்களின் மரணத்தின்போது அவர்களின் சேவை உணரப்படுவதும் இல்லை. மதிக்கப்படுவதும் இல்லை.

இவ்வகையில் தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தன்னலமற்ற சேவைகளைச் செய்த மாமனிதர்கள் பலர் உள்ளனர். மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் சேவை செய்த இவர்கள் ஒருபோதும் விருதுகளையோ, கௌரவங்களையோ மனதிற்கொண்டு சேவையாற்றுவதில்லை. ஆனால், அவர்களைக் கௌரவிப்பது தமிழ் மக்களின் கடமையாகும். ஏனெனில் அவர்கள் தமக்காக எதையும் சேர்த்துவைப்பவர்கள் அல்ல.

உலக நாடுகள் பலவற்றிலும் தேசிய விருதுகள் வழங்கப்படினும், அவற்றில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளினால் வழங்கப்படும் தேசிய விருதுகள் மாறுபட்டவை. இத்தேசிய விருதுகள் யாவும், ஏதோ ஒரு வகையில் தமிழரின் தேசிய எழுச்சிக்கும், உணர்விற்கும் வித்திட்டவர்களுக்கும், பாதுகாத்தவர்களுக்கும் வழங்கப்படும் விருதுகளாகும். அதாவது ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்காக தமிழ்த் தேசியத்தின் பாதுகாப்பிற்காக தமது சேவையை அர்ப்பணித்தவர்களுக்காக வழங்கப்படும் விருதுகள் ஆகும்.

இலக்கியம், கலை - பண்பாடு, போராட்டப் பங்களிப்பு, சாவையும் மதிக்காத துணிகரச் செயல் என்பனவற்றில் ஈடுபட்ட எட்டு மாமனிதர்களுக்கு தமிழீழ தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன. இத்தேசிய விருது பெறுபவர்களில் மூவர் தற்பொழுது உயிருடன் இல்லை.

ஒரு தேசிய விருதின் கௌரவம் விருதின் போது வழங்கப்படும் பணத்தின் பெறுமதியைக்கொண்டு அளவீடு செய்யப்படுவதில்லை; யாரால் எதற்காக வழங்கப்படுகின்றது என்பதே முக்கியமானதாகும். இத்தேசிய விருதுகள் புதிய சுதந்திரதேசம் ஒன்றை உருவாக்க முனைந்து நிற்கும் இளைய தலைமுறையினரால் இத்தேசத்தின் சுதந்திர உணர்வை வளர்த்தவர்களும், அதற்காக தம்மை அர்ப்பணித்தவர்களுக்குமாக வழங்கும் கௌரவ விருதுகளாகும். இதன்மூலம், புதிய தேசத்தின் மதிப்புமிகு மாமனிதர்களாக, தேசிய வீரர்களாக விருது பெறுபவர்கள் உயர்கின்றார்கள்; போற்றப்படுகின்றார்கள்.

மண்மீட்பிற்காக மரணிக்கும் மாவீரர்கள் போன்றும், இன்று களத்திலுள்ள போராளிகள் போன்றும் தேசிய விருது பெறுபவர்களும் தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலர்களே. அவர்கள் மறக்கப்படாமல் கௌரவிக்கப்படுவது பெருமைக்குரியது. எமது வரலாற்றிற்குச் செழுமை சேர்ப்பது. விடுதலைப்புலிகளின் இம்முயற்சி போற்றுதற்குரியது.

# முத்தமிழிற் கலை, பண்பாடு

புலவர்
ஈழத்துச்சிவானந்தன்

தமிழ்மொழியின் பழமை பல்லாயிரம் ஆண்டுகளால் கணக்கிடப்பட்டுள்ளது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்த இனம் என்பது புறப்பொருள் வெண்பாமாலையில் ஐயனாரிதனார் கூற்றாகும். காலத்தால் கருத்தால் கனிவால் முந்திய மூப்புடைய முதிர்மொழி தமிழே ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் தமிழின் பழமையையும், செழுமையையும், செம்மாப்பையும் செப்புகின்றது.

பிறமொழிகள் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் காட்டியதோடு தமது கடமையைமுடித்துக்கொண்டன. தொல்காப்பியர் எழுத்துச் சொல்லோடு பொருளுக்கும் இலக்கணம் கூறி உலகை வியக்க வைத்தார். இதனால் இவர் ஒல்காப்புகழ் பெறு தொல்காப்பியன் என்று உச்சிமேல் வைத்து உயர்த்தப்பட்டார். இலக்கியங்களுக்குப் பின்பே இலக்கணம் தோன்றும், இது இலக்கியல் நியதி. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட தமிழர்கள் சிந்தனைச் செம்மையும் மன வளமும் வாழ்க்கைச் சிறப்பும் பெற்றிருந்தார்கள். இப்பேற்றினை அவர்கள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாலுமே சுட்டியிருந்தார்கள். முத்தமிழ் வாழ்வே அவர்களை உலகில் முதல் மரியாதைக்குரியவர்களாக்கியது. இயல், இசை, நாடகம் என்னும் முக்கூட்டுத் தமிழ் அம்மக்களுக்கு வாழ்க்கைக்கு விருந்தாயும் வருத்தத்திற்கு மருந்தாயும் உதவியிருக்கிறது.

வாழ்க்கைப் போராட்டங்கள் மொழி வழித்தொல்லைகள் இயற்கை உற்பாதங்கள் செயற்கைத் துன்பங்கள் முதலியவற்றால் ஏற்படும் மனவேதனைகள் சோர்வுகள் வெறுப்புகள் கிலேசங்களை முத்தமிழ் முயற்சிகள் தீர்த்திருக்கின்றன. எதையும் தாங்கும் இதயத்தை முத்தமிழால் கட்டிவளர்த்த இனம் தமிழினம். முத்தமிழைக் கலை வடிவமாக்கிய பெருமையும் தமிழினத்துக்கு உண்டு. இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை என அவைதனி நிலைகாட்டி முத்தமிழ்க் கலையென தோகை வடிவம் எடுத்தது.

பயனற்ற எதிலும் பார்வை செலுத்தாத இனம் தமிழினம். வாழ்க்கைத்தேவைகளை முன்வைத்த சிந்தனையால் மேம்பட்டகுடி தமிழ்க்குடி. சுவைகளை ஏற்றுக்கொண்டாலும் சுவையால் வரும் தெளிவுகளையே போற்றியது; சுவையால் உண்டாகும் மயக்கங்களைப் புறக்கணித்தது. கலை என்ன செய்யும்? அதன் நிலை என்ன என்பதில் தமிழினம் கண்டிப்போடு இருந்தது. கலை குறித்த வரைவிலக்கணத்திலும் வரன்முறையிலும் தெளிவாயிருந்தது. இயற்கை எங்கணும் பரவிக் கிடக்கும் பயன்களை கறந்து ஒருவடிவத்தால் தருவது கலை. அழகாலும் உணர்வாலும் அப்பயன்களுக்கு சுவை சேர்க்கிறது. பசுவின் முலைக் காம்பால் சுரந்தபால் மனித குலத்திற்கு நிறையுணவாய் ஊட்டச்சத்தாய் உதவுவது போல கலைக்காம்பால் அது வடிவத்தால் வெளிவரும் கருத்துக்களும் உண்மைகளும் மனித குலத்தின் நிறைவுக்கு உதவுகின்றன.

குழம்பிய வாழ்க்கைக்கு கலை தெளிவு தருகிறது தெம்பூட்டுகிறது. வாழ்க்கையையும் இயற்கையையும் இணைத்து இன்பமும் திருப்தியும் கொள்ள வைப்பது கலை. வாழ்க்கைச்சுமையை இலகுவாக்குவது இது. புலன்கள் வழியில் மனிதனுக்குப் புத்துயிர்ப்பு கொடுப்பதும் கலையே. சூழ்நிலையின் தாக்கத்தால் மரத்துப்போகும் மனத்தை கலை மகிழவைத்து இளக வைக்கிறது. கலை வளர்க்கும் தலையாய பயிரே பண்பு எனப்படும். இப்பண்பே தமிழின் தனிக்குணம். தமிழ்க்கலை தன் இனத்திற்கு வழங்கிய மூலக்கருவே பண்பாடாகும். "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு என்று அன்று நாமக்கல் கவிஞர் சுட்டிக்காட்டியது தமிழர் பண்பாட்டையே. முத்தமிழ் வயலில் வளர்ந்த கலை கருக்கொண்டு ஈன்றுபுறம்தந்த உகப்புதுமையே பண்பாடு.

பண்பாடு என்னும் சொல்லை வேற்று மொழியினர் தமது மொழியில் ஆக்கம் செய்து பார்த்தார்கள். இதன் முழு ஆழத்தையும் அர்த்தத்தையும் தமது மொழி பெயர்ப்பில் காணமுடியாமல் தவித்தார்கள். இதற்குரிய காரணம் என்ன? நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். தமிழினம் தனது முத்தமிழாலும் உழுது களைநீக்கி பழுதற்றி சாலடித்து வேண்டும் பசளையிட்டு புலந்து வாடிவிடாதவாறு பல்லாண்டுகள் நித்திய கவனிப்புடன் பாடுபட்டு வளர்த்தெடுத்த உணர்வே பண்பாடு என்பது. இப்பண்பே தமிழர் தனித்திறன்.

தமிழர் பண்பாடு தடம்புரளாதிருக்க தமிழர் கலைகள் காவலாளிகளாக வேண்டும். காவலாளியான கலையே பண்புப் பயிரை மேய்ந்து விடாது பார்த்துக்கொள்ள வேண்டும். கலை பண்போடு கைகோர்த்து இணைந்து முத்தமிழ் தாயை மகிழ வைக்க வேண்டும். கைகோர்க்க வேண்டிய கலை கொடிறுடைக்கும் கை உயர்த்தினால் பண்பு பதைத்து சிதைந்துவிடும். பண்பு சிதைந்தசற்குப் பின்பு கலைக்கு விலை இருக்காது விலை இல்லாத கலை விலை மாதாய் அலையவேண்டியும் தன் நிலைக்கு இரங்கி வருந்த வேண்டியும் ஏற்படலாம். வாழ்க்கை நிலையினை காட்ட வேண்டிய கலை திசை திருப்பும் எல்லைவரை செல்லாது தடுத்தாட்கொள்ளப்பட வேண்டும்.

உடம்பால் ஒத்திருக்கும் மக்களை ஒன்றுபடுத்தி உணர்வூட்டுவதோடு பண்பால் ஒத்திருக்கும் பழக்கத்தையும் வளர்க்கும் பொறுப்பினை தமிழ்க்கலை ஏற்றுக் கொள்கிறது; இதனாலேயே உலகக் கலைகளில் தமிழ்க் கலைக்கு தனி இடம் உண்டாகியிருக்கிறது. பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்து சங்கத்திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை. நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்த தமிழ்ப்பாவை; இயல் இசை நாடகமாய் எழுந்து அறம் பொருள் இன்பப் பாலாய் பெருகி பதி, பசு, பாசப் பொருளைக் காட்டி நிற்கின்றாள். இவள் வளர்த்த கலையும் பண்பாடும் சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனிவருங்காலத்தின் சிறப்பும் ஒருங்கிழைவுகொண்டு விழாக்கோலம் பூண்டுள்ளது. பொருளுணர்ந்து போற்றிப்புகழ்வோமாக.

# காணாமற் போனோர் விவகாரத்தில் இத்தாலிய அமைப்புக்கள் அக்கறை

இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் மத்தியில் காணாமற் போனவர்கள் தொடர்பாக இத்தாலியில் சர்வதேச மன்னிப்புச் சபை, பேரவை 15ந்தினைச் சேர்ந்த திருமதி கபிரீலா கிரேஸ் அதிக அக்கறை காட்டி வருகிறார்.

கொழும்பிலுள்ள பத்திரிகைகளுக்கு அவர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில், விசாரணையின்றித் தடுத்து வைத்தல், அத்துமீறிக் கைது செய்தல், சட்ட விரோதமான முறையில் தண்டனை வழங்குதல் ஆகியன தொடர்பாகத் தனது கவலையைத் தெரிவித்திருக்கிறார். மற்றும், இலங்கை அரசுடன் மேற்கொண்ட கடிதத் தொடர்புகளில், தமிழ்ப் பிரசைகளின் குடியுரிமைகளையும் மனித உரிமைகளையும் அங்கீகரிக்கும்படி தான் கோரியதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துரதிர்ஷ்ட வசமாக தமது முயற்சிகளின் மத்தியிலும் தொடர்ந்து மனித உரிமைகள் சிறிலங்காவில் மீறப்படுவதாகவும், அநியாயமான முறையில் தமிழர்களும், சிங்களவரும் தண்டிக்கப்படுகிறார்கள் என்றும், அனைத்து இலங்கை மக்களினது மனித உரிமைகள் தொடர்பாக குரல் கொடுக்குமாறும் சிறிலங்காப் பத்திரிகைகளைக் கோரியுள்ளார்.

இதேவேளை இத்தாலிய சர்வதேசமன்னிப்புச்சபையின் மற்றொரு பிரிவான ஏ.ஐ. இத்தாலியா - 74 தமது நாட்டிலுள்ள பத்திரிகைகளில் பிரசாரம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது. இதற்கு உதவும் வகையில் இலங்கையில் 'காணாமற் போனவர்கள்' பற்றிய விபரங்களை அனுப்பி உதவுமாறு கோரியுள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் காணாமற்போவது பற்றியும், ஜே.வி.பியினர் அல்லது அந்த இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் காணாமற் போவது பற்றிய முறைப்பாடுகள் சில தமக்குக் கிடைத்திருப்பதாகவும் பத்திரிகைகளுக்கு ஏ ஐ இத்தாலியா -74 எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கைக்குள் வர அனுமதித்த சிறிலங்கா அரசு பலவந்தமாக கடத்தப்படுபவர்கள் தொடர்பான ஐ.நா செயற்குழுவை இலங்கைக்குள் வர அழைத்திருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளது.

## வெப்பத்தினால் 90 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் நிலவிய கடும் வெப்பத்தினால் தொண்ணூறுக்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் 52 பாகை செல்சியஸ் கிரேட்டில் வெப்பம் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ராஜஸ்தானில் கடும் வெப்பத்தினால் 25 பேர் உயிர் இழந்ததாகவும் கூறப்படுகிறது.

# காங்கிரஸ் கொள்கையே கொலைக்கு காரணம்

## - வாஜ்பாய்

(பம்பாய்)

''ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் என பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளை நம்புவதா என்பது தெரியாதிருக்கும் அதேவேளை இந்திய அரசாங்கம் ஏன் விடுதலைப் புலிகளை ஆயுதம் ஏந்தச் செய்தது என்பதை மக்கள் முதலில் கேட்கக் கடமைப்பட்டுள்ளீர்கள்'' என பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

பம்பாயில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசிய வாஜ்பாய் ''நாம் விடுதலைப் புலிகளுக்கு எமது தார்மீக ஆதரவை வழங்கியிருக்க வேண்டும் ஆனால் ஓர் ஆயுதப் புரட்சியை ஆதரித்து பின்னர் அதை அடக்க சிறிலங்கா அரசாங்கத்திற்கு உதவ இந்தியப்படைகள் அனுப்பி, இதன் விளைவாக இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்திய ராணுவம் இறந்தது'' என்று வாஜ்பாய் தனது உரையில் தெரிவித்தார்.

முன்னைய இந்திரா காங்கிரஸ் பின்பற்றிய கொள்கைகளே ராஜீவ் காந்தி இறப்பதற்கு காரணமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# புல்கலைக்கழக மாணவர் கைது

(நமது நிருபர்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீட இறுதி ஆண்டு மாணவன் ஜெயசீலன் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நேற்று முன்தினம் இவர் தமது சொந்த ஊரான மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருக்கையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

# நிவாரணப் பொருள்களில் பழுதடைந்த பால் மா

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் உலர் உணவு நிவாரணப் பொருள்களுடன் வழங்கப்படும் பாலுணவு பழுதடைந்தமை எனவும் மனித உபயோகத்துக்கு உகந்தவை அல்ல எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப் பால்மா வகைகள் 1991 ஆம் ஆண்டு ஏப்பிரல் 20 ஆம் திகதியுடன் காலாவதியானவை என்றும் இவற்றை உடனடியாக வாபஸ் பெறும்படியும் சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்

# இடமாற்றங்களை இடமாற்ற சபையே செய்யும்

(கொழும்பு)

அரசாங்க சேவையிலுள்ள இடமாற்றங்களை அதனுடன் சம்பந்தப்பட்ட இடமாற்ற சபையே இனிவரும் காலங்களில் செய்ய வேண்டுமென பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான தீர்மானத்தை வெளியிட்ட அமைச்சு இடமாற்றம் மேற்கொள்ளும் பணியினை இடமாற்ற சபையே மேற்கொள்ளும் என்றும், இந்தப் பணி 13 ஆண்டு காலத்துக்குப் பின்னர் மீண்டும் செயற்படத்தொடங்கியுள்ளதுஎன்று குறிப்பிட்டுள்ளது.

# அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிலவும் அத்தியாவசிய பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பு உயர் அதிகாரிகளுடன் உரையாடுவதற்காக அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் நேற்று கொழும்புக்கு பயணமானார். (க)

## மலையக மக்களின் பிரச்சினைகளை

# மாகாணசபைகள் தீர்த்து வைக்கவில்லை

(இரத்தினபுரி)

மலையக மக்கள் தீர்க்கப்படாத தமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டுமென எதிர்பார்த்தே ஐக்கிய தேசிய கட்சிக்கு மாகாணசபைத் தேர்தலில் தமது அமோக ஆதரவை அளித்தனர். ஆனால் மாகாண சபைகள் மூலம் எந்த நன்மையும் இந்த மக்களுக்கு கிடைக்கவில்லை

இவ்வாறு சப்ரகமுவ மாகாண சபையின் உறுப்பினரான ஏ. எம். டி ராஜன் மாகாண சபை கூட்டத்தில் தெரிவித்தார். இது வரை மலையக மக்களின் நலன் கருதி எந்த ஒரு திட்டத்தையும் மாகாண அரசு வரையவில்லை ஆனால் நாங்கள் எமது மக்களிடம் பொய் சொல்லி உள்ளூராட்சி சபை தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியினை பெற்றுத் தந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# படகு கவிழ்ந்தது

(மண்டைதீவு)

குருநகரைச்சேர்ந்த மீன்பிடி பிளாஸ்ரிக் படகு ஒன்று நேற்றுக் கடும் காற்று காரணமாக கவிழ்ந்தது. அதில்இருந்த இரு மீனவரும் மண்டைதீவுக்கு நீந்திக்கரை சேர்ந்துள்ளனர். பின்பு அவர்களது பிளாஸ்ரிக் படகும் மண்டைதீவில் கரை ஒதுங்கியுள்ளது. (88)

# காலாவதியான காசுக் கட்டளை மாற்றுவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

காலாவதியாகிய உள்ளூர் காசுக்கட்டளைகளை மேலதிக கட்டணம் எதுவும் இன்றி இவ் ஆண்டு இறுதிவரை மாற்றிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில்உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் இக்காசுக்கட்டளைகளை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச தபால் அத்தியட்சகர் திரு. சடாட்சரநாதன் அறிவித்துள்ளார்.

அதேவேளை வெளிநாட்டு காசுக் கட்டளைகள், பிரித்தானிய தபாற்கட்டளைகள் போன்றவையும் விசேட அனுமதி பெறப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. (க)

# 18 மீனவருக்கு மாலையில் சிறை

மாலைதீவு கடற்பகுதிக்குள் பிரவேசித்ததற்காக எண்பத்தெட்டு இலங்கைமீனவர்களை மாலைதீவு அரசு கைதுசெய்து அதில் பதினெட்டுப்பேரை இருபத்திரெண்டு தொடக்கம் இருபத்திநான்கு மாதம் வரையான காலத்துக்கு சிறைக்குள் தள்ளி உள்ளது.

இந்த பதினெட்டுப்பேரும் படகு ஓட்டிகளாவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# வெளியார் தலையீட்டை தடுக்க கடலில் ரோந்து

(சென்னை)

தேர்தலின் போது வெளியாரின் ஊடுருவலைத் தடுக்கும் முகமாக ராமநாதபுரம் கடலோரங்களில் ரோந்துப் பணியைச் சுங்கப் பிரிவும், கடற்படை, மற்றும் விமானப் படைப் பிரிவுகளும் மேற்கொள்ளும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அதிசயராஜ தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசிய அவர் ராமநாதபுர கடல், வான்வெளியை விமானப் படை, கடற் படைப் பிரிவுகள் கண்காணிக்கும் என்றார்

# திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெறும்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவைகள் பரீட்சை திட்டமிட்டபடி வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்ததாக 'வீரகேசரி' தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதிலும் இருந்து 30,000பேர் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை கல்வி நிர்வாக சேவைகள் பரீட்சை 1988 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது.

இதே நேரம் தரம் இரண்டு அதிபர் பரீட்சை யூலை மாதம் 6 ஆம் திகதியும் முதலாம், இரண்டாம் தர அதிபர் பரீட்சை யூலை 13 ஆம் திகதியும் வவுனியாவில் நடைபெறும்.

## மறைக்கப்பட்ட நாலாயிரம்

# ஜாக்பாட் இயந்திரங்களை தேடி பொலிஸ் வேட்டை

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் கொழும்பு நகரப் பொலிஸார் முதலாம் திகதி பல இடங்களில் இருந்து ஜாக்பாட் இயந்திரங்களை கைப்பற்றியுள்ளனர் என கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆயினும் மேலும் நாலாயிரம் ஜாக்பாட் இயந்திரங்களை சிலர் மறைந்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருப்பதை அடுத்து தேடுதல் வேட்டை மேலும் அதிகரித்திருப்பதாகவும் பொலிஸ் மா அதிபர் இது பற்றிய விபரங்களை தந்து உதவுமாறு மக்களை கேட்டுள்ளதாகவும் அந்தச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதேநேரம் கொள்ளுப்பிட்டியில் ஜாக்பாட் இயந்திரங்கள் சிலவற்றையும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கைப் பணத்தையும், 13,600 அமெரிக்க டொலர்கள், 51,000 டொச் மார்க்குகள், 2000 அவுஸ்திரேலிய டொலர்கள், ஒரு லட்சம் ஹொங் ஹொங் டொலர்கள், 2000 ஸ்ரேலிங் பவுண்கள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளனர்

# இராணுவ உளவாளிகளால் குடும்பப் பெண் கைது

(வவுனியா)

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவ உளவாளிகளால் தமிழ்ப் பொதுமக்களில் பலர் திடீர் திடீர் எனக் கைது செய்யப்படுகின்றனர்.

அண்மையில் நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த சரோஜினி என்னும் மூன்று பிள்ளைகளின் தாயார் இராணுவ உளவாளிகளினால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 5 ஆம் திகதி வவுனியா பூந்தோட்டம் பகுதியிலிருந்து நகரை நோக்கிச் சென்ற பெரியசாமி கண்ணன் என்ற இளைஞர் கைது செய்து கடத்தப்பட்டுள்ளார்.

### அனுமதி அட்டை

உள்ளோர் உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கத்திற்குப் பின்புறமாக அமைக்கப்பட்டுள்ள விசேட அலுவலகத்திலும், சங்கானை இணக்கமன்றக் காரியாலயத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காரியாலயத்திலும் தமக்குரிய அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

வடமராட்சி மக்களுக்கு வதிரிச் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள விசேட காரியாலயத்திலும், தென்மராட்சி மக்களுக்குத் தென்மராட்சி மக்கள் முன்னணிக் காரியாலயத்திலும், தீவுப்பகுதி மக்களுக்கு அல்லைப் பிட்டியிலும் அனுமதி அட்டைகள் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் மக்கள் பூநகரி வாடியடியிலும், பண்டிவிரிச்சானில் அமைக்கப்பட்டுள்ள விசேட காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம். முல்லைத்தீவு மக்கள் புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள விசேட காரியாலயத்திலும், வவுனியா மக்கள் ஓமந்தையில் ஏற்கெனவே அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட இடத்திலும், கிளிநொச்சி மக்கள் கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்ட விசேட காரியாலயத்திலும் தமது அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பாஸ் தேவைப்படுவோர் தற்போது அறிவிக்கப்பட்ட புதிய விதிமுறைகளைக் கைக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### ஆனையிறவில்

டன மீண்டும் பி. ப 2-501 அளவில் ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூன்று குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசித் தாக்கின.

பி. ப. 12-50 தொடக்கம் பி. ப 1-30 வரை மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலின் போது ஆறு தடவைகள் விமானத்திலிருந்து குண்டுகள் போடப்பட்டன. இது வரை இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

### பேச்சுவார்த்தை

கடந்த நான்காம் திகதி கூடிய இந்த அனைத்துக்கட்சி மாநாட்டுக்கு நீதியமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத் தலைமை தாங்கியிருந்தார்.

### வந்தாறுமூலையில்

அத்துடன் அம்பலத்தடிப் பகுதியில் தமிழ் மக்களின் இரண்டு கடைகளையும், நான்கு வீடுகளையும் உடைத்துப் பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துக் கொண்டு கடைகளையும், வீடுகளையும் தீமூட்டி எரித்துள்ளார்கள்.

### மனித உரிமைகள்

உறுப்புரிமை மூன்று வருடகாலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை ஐ, நா. மனிதக் குடியேற்ற ஆணைக் குழுவிலும் சிறிலங்கா 1992, ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்பதவி நான்கு வருடங்களுக்கு செல்லுபடியாகும். இவை உத்தியோகபூர்வமாக ஜெனிவாவில் அறிவிக்கப்பட்டுள்ளன.

### கலைப்பிரிவு

கும் வகையில் கற்பித்தலில் ஈடுபடலாம். மணித்தியாலத்திற்கு ரூபா 75 ஊதியம் வழங்கப்படும். கஷ்டப் பிரதேசங்களில் ஆசிரியர்களுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுக்கப்படும். இப்போதுள்ள ஆசிரியர் மாற்றம் தொடர்பான முறை கைவிடப்படுவதோடு, ஆசிரியர் தாம் விரும்பும் பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருந்தால் விண்ணப்பிக்கலாம்

### புலிகளுடனான

மோதல் ஏற்பட்டது. இம் மோதல் சம்பவத்தை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் இராணுவத்தரப்பில் நான்கு பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

### 4ஆம் நாள்

திரு. குணா அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. செல்வம் மாமா அவர்கள் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நாதஸ்வர தவில் கச்சேரி இடம்பெற்றது தொடர்ந்து தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. செல்வராஜாவின் தலைமையில் விடுதலைப்புலிகளின் திறப்புரை நிகழ்ந்தது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செல்வம் மாமா, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு வாஞ்சிநாதன், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து இளைஞர் கவியரங்கு, வாத்திய இசைக் கச்சேரி, நாட்டிய நாடகம், நாட்டுக் கூத்து, மெல்லிசை நிகழ்வு ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பெருந்தொகையான பொது மக்கள் இவ்விழாவில் திரண்டிருந்து நிகழ்ச்சிகளைக்கண்டு களித்தனர். (மு)

### இலட்சியத்தை

கலந்து கொண்டு உரையாற்றிய முல்லைத்தீவு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வம் மாமா தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் 1974 ஆம் ஆண்டு யாழ். நகரில் இடம் பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒன்பது தமிழர்கள் அரசபடையினரால் கொல்லப்பட்டனர்

அன்று தமிழர்கள் ஒற்றுமையாக ஒன்றுகூடி தமிழ் மொழிக்கு விழா எடுத்ததை சிறிலங்கா அரசு திட்டமிட்டுக் குழப்ப முற்பட்டது. ஆனால் இன்று நாம் எமது தமிழுக்கு எவ்வித இடையூறுமின்றி சுதந்திரமாக விழா எடுக்கிறோம் என்றார். (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.